Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    கார்த்திகை 23    (08-12-1992)    செவ்வாய்க்கிழமை    ஓசை 294


## ஐ. நா. பிரதிநிதிகள் இன்று யாழ். வருகின்றனர்

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் உயர் அதிகாரிகள் இருவரும் இன்று யாழ்ப்பாணம் வந்து சேருவர். திரு. சார்க், டாக்டர் நிக்கலஸ் பீற்றர் ஆகிய இரு உயர் அதிகாரிகளும் அரச அதிபர், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்திப்பர் அத்துடன் யாழ்ப்பாணத்திலுள்ள அகதிகள் முகாம்களையும் பார்வையிட்டு நிலைமைகளையும் அறிவர். அவர்கள் இரண்டு தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பர் என தெரியவருகிறது. இவ்விருவரும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து ஐரோப்பிய நாடுகளில் உள்ள தமிழ் அகதிகள் குறித்து பேச்சு வார்த்தை (4 ஆம் பக்கம் பார்க்க)

### பாபர் மசூதி தகர்ப்பின் எதிரொலி

# பிரதமர் நரசிம்மராவ் பதவி விலக நேரும்?

# பெரும் நெருக்கடியில் காங்கிரஸ் அரசு

## ராணுவ தளபதிகள் உயர்மட்ட மாநாடு

## படைகளை சீரமைக்க பகீரத முயற்சி

(கொழும்பு)

இராணுவத்திற்குள் அண்மைக் காலங்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்தும் படையினருக்கு ஏற்பட்ட இழப்புகளை சீரமைக்கும் முயற்சியிலும் சிறிலங்கா இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா ஏனைய உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளதாக கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக் கலந்தாலோசனையில், மேஜர் ஜெனரல்கள் ஜெரி டி. சில்வா, பரணகம, அபயரட்ணா, தளுவத்த, அக்கம ஆகியோர் பங்கு கொண்டனர் எனவும், இங்கு உயரதிகாரிகளுக்கு இடையிலான கருத்து வேறுபாடுகள் காரணமாக இராணுவத்திலிருந்து வெளியேறுவோர் எண்ணிக்கை அதிகரிப்பது பற்றியும், போர் முனையிலுள்ள படையினரின் வசதிக் குறைவுகள் பற்றியும் ஆராயப்பட்டது எனவும் தெரியவருகிறது.

அத்துடன் இராணுவத்தினர் மத்தியில் இழப்பு அதிகரிப்பது பற்றி பேசப்பட்டதுடன், புலிகள் மீதான யுத்த நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக இராணுவ அதிகாரிகள் தமக்கிடையிலான கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமெனவும் இங்கு கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும் அதிகார பூர்வ வட்டாரங்கள் கூறியுள்ளன.

## உலுக்குளம் முகாம் மீது புலிகள் தாக்குதல்

### இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு

உலுக்குளம் சிறிலங்கா இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதாக சிறிலங்காஇராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த சனிஇரவு இந்த தாக்குதல் நடைபெற்றதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## கட்டுப்பொத்த படைமுகாம்

## பாராளுமன்றத்தில் பெரும் அமளிதுமளி

(டில்லி)

அயோத்தியிலுள்ள பாபர் மசூதி அடிப்படை இந்து தீவிரவாதிகளால் இடித்துத் தகர்க்கப்பட்டதினால் எழுந்துள்ள அரசியல் நெருக்கடி காரணமாக இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் பதவிவிலக வேண்டிவரலாமென பி. பி. ஸி யின் டில்லிச் செய்தியாளர் தெரிவித்துள்ளார். லோக்சபாவில் எதிர்க்கட்சிகளால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டால் பிரதமர் நரசிம்மராவின் நிலை ஆபத்தாகிவிடும் எனவும் அச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

பாபர்மசூதி அடிப்படை இந்துத்தீவிரவாதிகளினால் இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாரதீய ஜனதாக் கட்சி மீதும், இந்திராகாங்கிரஸ் கட்சியின் மீதும் எதிர் கட்சிகள் பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளன. இவ்வாறு ஒரு சம்பவம் நடந்தமைக்கு தார்மீகப் பொறுப்பேற்று இந்தியப் பிரதமர் பதவிவிலக வேண்டும் என அவை கோரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளை பிரதமர் நரசிம்மராவ் தாமாகவே பதவி விலக மறுத்தால் அரசின்மீது நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டுவர எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், நரசிமமராவ் தாமாகவே பதவி விலக மறுத்தால், அவர் அரசைக் கலைக்குமாறு தாம் ஜனாதிபதி சங்கர்தயாள்சர்மாவைக் கேட்டுக் கொள்ளப் போவதாக எதிர்க் கட்சிகள் தெரியப்படுத்தியுள்ளன.

அடிப்படைவாத இயக்கங்களைத் தடை செய்யவும் [4 ஆம் பக்கம் பார்க்க]

## முஸ்லிம் உறுப்பினர்களை பதவிவிலகக் கோரிக்கை

(டில்லி)

லோக்சபை உறுப்பினர்களாக உள்ள முஸ்லிம் தலைவர்கள் தமது பதவிகளிலிருந்து உடனடியாக விலக வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது

இந்த கோரிக்கையை பாபர் மசூதி பாதுகாப்புக் குழு விடுத்துள்ளது.

## இன்று பந்த் நடத்த எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(டில்லி)

உச்ச நீதி மன்றத்தின் உத்

னர்.

இதேவேளை இன்றும்

## அத்வானி ராஜினாமா

[டில்லி]

பாரதீய ஜனதாக்கட்சி தலைவர் எல். கே அத்வானி தனது பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

## கொழும்பில் பாதுகாப்பு

அயோத்தியில் பாபர் மசூதி உடைக்கப்பட்டதையடுத்து கொழும்பில் பாதுகாப்பு பலப்

படையினருக்கு ஏற்பட்ட இழப்புகளை சீரமைக்கும் முயற்சியிலும் சிறிலங்கா இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா ஏனைய உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளதாக கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத் கலந்தாலோசனையில், மேஜர் ஜெனரல்கள் ஜெரி டி. சில்வா, பரணகம, அபயரட்ணா, தளுவத்த, ஆகம ஆகியோர் பங்கு கொண்டனர் எனவும், இங்கு உயரதிகாரிகளுக்கு இடையிலான கருத்து வேறுபாடுகள் காரணமாக வசதிக் குறைவுகள் பற்றியும் ஆராயப்பட்டது எனவும் தெரியவருகிறது.

அத்துடன் இராணுவத்தினர் மத்தியில் இழப்பு அதிகரிப்பது பற்றி பேசப்பட்டதுடன், வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமெனவும் இங்கு கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும் அதிகார பூர்வ வட்டாரங்கள் கூறியுள்ளன.

## உலுக்குளம் முகாம் மீது புலிகள் தாக்குதல்

### இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு

உலுக்குளம் சிறிலங்கா இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த சனிபிரவு இந்த தாக்குதல் நடைபெற்றதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# கட்டுப்பொத்த படைமுகாம் மூடுவது குறித்து பரிசீலனை

(கொழும்பு)

கட்டுப்பொதத இராணுவ முகாமை மூடிவிடுவது குறித்து இராணுவ உயர்பீடம் பரிசீலனை செய்துவருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதத்திலும் இம் மாதம் 2-ம் திகதியும் இம் முகாம். புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகிய போது இராணுவத் தரப்புக்கு பெரும் உயிர், தளபாட இழப்புகள் ஏற்பட்டமை தெரிந்ததே. இதனையடுத்து இம் முகாமின் பாதுகாப்புக் குறித்து பெரும் கேள்வி எழுந்துள்ளதால் இம் முகாமை மூடிவிட இராணுவ உயர்பீடம் ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது

இம்முகாம் சிங்களகுடியேற்றங்களை பாதுகாப்பதற்கென 1989 இல் முன்னாள் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னாவின் ஆலோசனையின் பெயரில் அமைக்கப்பட்டது.

கடந்த ஜூலை மாதம் இம் முகாம் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டதை அடுத்து முன்னாள் வடபிராந்திய இராணுவத்தளபதி டென்சில் கொப்பேகடுவாவின் ஆலோசனைப்படி ஆட்பலம் இருமடங்கு ஆக்கபட்டதுடன் இவர்களுக்குபெருமளவு நவீன ஆயுதங்களும் வழங்கப்பட்டு முகாம் பலப்படுததப்பட்டிருந்தது.

எனினும் கடந்த 2-ம்திகதி இம்முகாம் மீண்டும் புலிகளால் தாக்கப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டதை அடுத்து இம்முகாமின் பாதுகாப்பு கேள்விக்குரியதாகியது.

இடைக்காட்டு தாக்குதல் நடத்தப்பட்டு ஒரு வாரத்தினுள் இத் தாக்குதல் நடந்திருப்பதனால் இராணுவத்தினர் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

## அராலி கண்ணி வெடிச் சம்பவத்தை படம்பிடித்தவரை கண்டுபிடிக்க நடவடிக்கை

(கொழும்பு)

அராலித்துறைக் கண்ணி வெடிச் சம்பவத்தின் போது டென்சில் கொப்பேகடுவ உட்பட பத்துப் படை அதிகாரிகளும் இரத்த வெள்ளத்தில் காட்சியளிக்கும் புகைப்படங்கள் எவ்வாறு எதிர்க்கட்சிகளின் கைகளுக்கு எட்டியது

[4 ஆம் பக்கம் பார்க்க]

## குடிநீர் விநியோகம்; சேதமாக்க புலிகள் திட்டம்

### பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரில் குடிநீர் விநியோகத்திட்டத்தை சேதப்படுத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருப்பதாகப் பொலிசார் கூறியுள்ளனர்.

நகரத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கேள்விக்கு உள்ளாக்கும் வகையில் இதனைச் செய்யத் திட்டமிட்டிருப்பதாகவும், இதனை நிறைவேற்ற என விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த நீலன் என்பவர் கொழும்பு நகருக்கு வந்திருப்பதாகவும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

நீலன் என்பவர் அண்மையில் கொட்டாஞ்சேனைப் பகுதியில் பொலிசாரால் கைது செய்யப்பட்டதாகவும், இவர்தான் பாராளுமன்ற உறுப்பினர் சாம் தம்பிமுத்துவின்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழ்வர்த்தகர்கள் கொலை இருவர் பொலிசாரால் கைது

[வவுனியா]

வவுனியா தமிழ் வர்த்தகருடன் மேலும் இரு தமிழர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டமை சம்பந்தமாக இருவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

கலாம் என்று அழைக்கப்படும் முஸ்லிம் ஒருவரும், பியந்த என்றசிங்களவருமே கைது செய்யபட்டுள்ளனர்.

தமிழ் வர்த்தகர் இலங்கேஸ்வரன் உட்பட மூன்று பேரை அனுராதபுரத்தில் வைத்து கொலை செய்த கொலையாளிகள் அவர்களிடமிருந்த பல லட்சம் ரூபா பணத்தை அபகரித்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இக்கொலைகளில் சம்பந்தப்பட்ட மேலும்பலரை பொலிசார் தேடி வலை விரித்துள்ளனராம். (தி)

எனவும் அச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

பாபர்மசூதி அடிப்படை இந்துத்தீவிரவாதிகளினால் இடிக்கபட்டதைத் தொடர்ந்து பாரதீய ஜனதாக் கட்சி மீதும், இந்திராகாங்கிரஸ் கட்சியின் மீதும் எதிர் கட்சிகள் பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளன. இவ்வாறு ஒரு சம்பவம் நடந்தமைக்கு தார்மீகப் பொறுப்பேற்று இந்தியப் பிரதமர் பதவிவிலக வேண்டும் என அவை கோரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளை பிரதமர் நரசிம்மராவ் தாமாகவே பதவி விலக மறுத்தால் அரசின்மீது நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டுவர எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், நரசிம்மராவ் தாமாகவே பதவி விலக மறுத்தால், அவர் அரசைக் கலைக்குமாறு தாம் ஜனாதிபதி சங்கர்தயாள்சர்மாவைக் கேட்டுக் கொள்ளப் போவதாக எதிர்க்கட்சிகள் தெரியப்படுத்தியுள்ளன.

பசூதி நிர்மூலமாக்கப்பட்ட இடத்தில் மீண்டும் பசூதியைக் கட்டவும், இந்து மத அடிப்படைவாத இயக்கங்களைத் தடை செய்யவும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முஸ்லிம் உறுப்பினர்களை பதவிவிலகக் கோரிக்கை

(டில்லி)

லோக்சபை உறுப்பினர்களாக உள்ள முஸ்லிம் தலைவர்கள் தமது பதவிகளிலிருந்து உடனடியாக விலக வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது

இந்த கோரிக்கையை பாபர் மசூதி பாதுகாப்புக் குழு விடுத்துள்ளது.

## இன்று பந்த் நடத்த எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(டில்லி)

உச்ச நீதி மன்றத்தின் உத்தரவை மீறி பாபர் மசூதியை இடித்துத் தகர்த்ததை எதிர்த்து இந்தியா முழுவதும் இன்று பந்த ஒன்றை நடத்தத் தேசிய முன்னணியும், இடது சாரி முன்னணியும் அழைப்பு விடுத்துள்ளன.

இந்த இரு முன்னணிகளின் தலைவர்கள் கூட்டாக விடுத்த செய்தி அறிக்கை ஒன்றில், தமது நாட்டின் மத சார்பற்ற அதிவாரத்துக்கு ஏற்பட்டுள்ள இந்தக் கவலைக்கிடமான சவாலை மதம், இனம், ஜாதி என்ற வேறுபாடின்றி எல்லா மக்களும் எதிர்த்துச் சமாளிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளன.

அமைதியான பந்த் ஒன்றை அனுசரித்து மக்கள் ஒற்றுமையைப் பராமரிக்குமாறு அவர்கள் மக்களைக் கோரியுள்ளனர்.

இதேவேளை இன்றும் நாளையும் துக்கம் அனுஷ்டிக்கும்படி முஸ்லிம் தலைவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

## அத்வானி ராஜினாமா

[டில்லி]

பாரதீய ஜனதாக்கட்சி தலைவர் எல்.கே அத்வானி தனது பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

## கொழும்பில் பாதுகாப்பு

அயோதத்தியில் பாபர் மசூதி உடைக்கப்பட்டதையடுத்து கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

# இஸ்லாமிய நாடுகளில் இந்துக் கோவில்கள்மீது தாக்கு

அயோத்தியில் பாபர் மசூதி இந்து அடிப்படைவாதிகளால் தாக்கி அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாகிஸ்தான், பங்களாதேஷ், வளைகுடா நாடுகள் ஆகியவற்றிலுள்ள இந்துக் கோவில்களும், இந்திய உடைமைகளும் தாக்கப்பட்டன

பாகிஸ்தானில் இருபது இந்துக் கோவில்களை முஸ்லிம்கள் தாக்கிச் சேதம் படுத்தியுள்ளனர். பல கோவில்களை தீவைத்து எரித்தனர். இதனை அடுத்துப் பாகிஸ்தானின் கராச்சி நகரம் உள்ளிட்ட பல இடங்களில் ஊரடங்கு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்துக் கோவில்களுக்கு வைக்கப்பட்ட தீ பரவி அருகிலிருந்த வர்த்தகக் களஞ்சியங்களையும் நாசம் செய்துள்ளது லாகூரிலுள்ள இந்திய எயர் லயன்ஸ் நிலையத்துள் அத்து மீறி நுழைந்த கும்பல் ஒன்று அங்கிருந்த மூன்று வாகனங்களுக்கு தீ மூட்டியுள்ளது. பொலிஸார் லாகூரில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாபர் மசூதி மீது இராமர் ஆலயம்

(டில்லி)

அயோத்தியில் பாபர் மசூதியை இடித்துத் தகர்த்த இடத்தில் இந்து சமய அடிப்படை வாதிகள் இந்து ஆலயம் ஒன்றை எழுப்பியுள்ளனர்.

பொலிஸாரின் தடையையும் மீறி இந்து சமய அடிப்படை வாதிகள் ராமருக்கு ஆலயம் அமைத்த தகவலைச் செய்தி[illegible] செய்துள்ளன.

சலவைக் கற்களால் கட்டப்பட்ட இந்தப் புதிய இராமர் ஆலயத்தைச் சுற்றி அயோத்தியில் கூடியிருந்தவர்கள் சமய நிகழ்ச்சிகளில் ஈடுபட்டனர்.

## இஸ்லாமிய நாடுகள் இந்தியாமீது கண்டனம்

அயோத்தி பாபர் மசூதி இடிக்கப்பட்டது. தொடர்பாக பல இஸ்லாமிய நாடுகள் இந்தியா மீது கண்டனம் தெரிவித்துள்ளன இச் சம்பவத்தை வன்மையாக கண்டித்துள்ள பாகிஸ்தான் அரசு இன்றைய தினத்தை துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

நாட்டு மக்கள் அனைவரும் துக்கம் அனுஷ்டிக்க வேண்டும் என்றும் பாபர் மசூதியின் அழிப்பு இந்து அடிப்படைவாதத்தின் உச்சக் கட்டம் என்றும் பாகிஸ்தான் பிரதமர் நவாவ் சரீப் கூறியிருக்கிறார்

மேலும் அயோத்தியில் மசூதி இடிக்கப்பட்டதற்கு

[4 ஆம் பக்கம் பார்க்க]

# இந்தியாவில் இந்து-முஸ்லிம்கலவரம் பொலிஸ் துப்பாக்கிசூடு; 200 பேர்பலி

(டில்லி)

அயோத்தி பாபர் மசூதி இடித்துத் தகர்க்கப்பட்டதைத்தொடர்ந்து நேற்றுவரை சுமார் 200 பேர் கொல்லப்பட்டனர்.

புதுடில்லியிலும், பன்னிரண்டுக்கும் அதிகமான வேறு நகர்களிலும் மோசமான வன்செயல்கள் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம்கள் பல நகரங்களில் பள்ளிவாசல் தாக்கப்பட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தினார்கள். பொலிசாருக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் பல இடங்களில் கைகலப்புகள் ஏற்பட்டன.

மிகமோசமான வன்முறைச் சம்பவங்கள் சில தென் இந்திய மாநிலமான கர்நாடகாவில் இடம்பெற்றன. கர்நாடக மாநிலத்தில் பல்வேறு நகரங்களில் ஏற்பட்ட மோதல்களில் 15 பேர் வரை கொல்லபபட்டனர். போபாலில் கத்திகள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி.
(சி-5510)

### திருமண சேவை

பொருத்தமான மணமகன்/மணமகள் தேடுபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம். சந்திப்பு சனி காலை. (3764)

### விற்பனைக்கு

யாழ். பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட பகுதியில் 1 பரப்பு வெறுங் காணி குத்தகைக்குக் கொடுக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். T. கனகசபை. 17, பிறவுண் வீதி. யாழ்ப்பாணம். (3764)

### தவறிவிட்டது!

கொழும்பிலிருந்து வரும் போது நல்லூரில் படகில் பொருள்களை ஏற்றும்போது இரண்டு பிரயாணப்பை (மஞ்சள், நீலம்) ஒருகடவுச்சீட்டு, அடையாள அட்டை (இல. 721930262V) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வ. தியாகராஜா 54/8, ஆத்திசூடி வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (3769)

### பற் சிகிச்சை நிலையம்

(எஸ்.பி. சாமி கோ கட்டிடம்) யாழ். பஸ் நிலையம் அருகில் பார்வையிடும் நேரம் தினசரி 12.00 ந.ப - 2.00 பி.ப.
(3230)

### புதிய

## பொலிஸ் சார்ஜன்ட் ஆயுதங்களுடன் ஓட்டம்

(கொழும்பு)
ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் தனது ஆயுதங்களுடன் தப்பியோடிவிட்டார்.

திரு. சிவா என்ற பெயரையுடைய இந்த பொலிஸ் உத்தியோகத்தர் கடந்த அக்டோபர் 27 ஆம் திகதி நான்கு நாட்கள் லீவுபெற்றுக்கொண்டு மேற்படி பொலிஸ் நிலையத்தில் இருந்து வெளியேறினார்.

இதன் பின்னர் இவர் மீண்டும் கடமைக்கு திரும்பவில்லை இவருக்கு வழங்கப்பட்டிருந்த ரி - 56 பட்மொடல் துப்பாக்கி மற்றும் 40 சுற்று ரவைகளைக் கொண்ட மகசின் ஆகியவற்றை இவர் தன்னுடன் எடுத்துச் சென்றிருக்கிறார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலதிக படை முகாம்கள்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் மேலதிக இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் முகமாகவே இவ்வாறு மேலதிக இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. அண்மைக்காலமாக இப்பகுதிகளில் இடம்பெற்று வரும் குண்டுவெடிப்புச் சம்பவங்களை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. வீதிகளில் மேலதிக சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டிருப்பதுடன் சோதனைகளும் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

## மு/புதுக்குடியிருப்பு ப. நோ. கூ. சங்கம்,

(வரையறுள்ளது)

## பதவி வெற்றிடங்கள்

(1) பொதுமுகாமையாளர், குறியீட்டு இல.115/8
(2) கணக்காளர், குறியீட்டு இல.104/10

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பம் முல்லைத்தீவு மாவட்டத்தில் வசிப்பவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. (சங்க எல்லைப்பரப்பில் வசிக்கும் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்). பின்வரும் தகைமையுடையவர்கள் தாமாகவே விண்ணப்பப் பத்திரங்களைத் தயாரித்து 1992 12. 25ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்போ "தலைவர், மு/புதுக்குடியிருப்பு ப. நோ. கூ. சங்கம், மு/புதுக்குடியிருப்பு" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

1) பொதுமுகாமையாளர்: குறியீட்டு இல. 115/8
கல்வித் தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 9-வது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடத்திற்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10-வது சம்பளத் திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 06 வருட அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன், அல்லது இதற்கு இணையான பட்டத்துடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 01 வருடத்திற்குக் குறையாத அனுபவம்,

அல்லது

## கிராமசேவையாளர் பிரிவு எல்லைகள் மாற்றம்

(கொழும்பு)
கிராமசேவகர் பிரிவுகளின் எல்லைகள் மீள்வரையறை செய்யப்பட உள்ளது. சுமார் 300 குடும்பங்களுக்கு ஒரு கிராமசேவகர் பிரிவு என்ற முறையில் இந்த எல்லைகள் வரையறுக்கப்படும் என்று மாகாணசபைகள் அமைச்சர் ஜோன் அமரதுங்க பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P அவர்களின்

## 68 - வது பிறந்த தின அறநிதிய புலமைப் பரிசில் வழங்குதல்

மேற்படி புலமைப் பரிசில் 1991 ஏப்ரல் மாதம் க. பொ. த. உயர்தர விசேட பரீட்சைக்குத் தோற்றி யாழ். பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட வறுமையின் உச்சவரம்பும் திறமையின் உச்சவரம்பும் கொண்ட இருமாணவர்களுக்கு வழங்கப்பட உள்ளது. இவர்கள் வலிகாமம் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்தவர்களாக இருக்கவேண்டும். தாம் கல்வி கற்ற கல்லூரிகளின் அதிபரின் சிபார்சுடன் விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். பெற்றபுள்ளிகள், குடும்பநிலை ஆகியவை உறுதிப்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அலுவலகத்தில் பெற்று 25-12-1992க்கு முன்பாக விண்ணப்பம் தேவஸ்தான முகவரிக்குச் சேர்க்கப்பட வேண்டும். அறநிதியக் குழுவின் சிபார்சின் பேரில் தெரிவு செய்யப்பெற்ற இரு மாணவர்களுக்கு 07-01-1993 வியாழக்கிழமை பரிசில்கள் வழங்கப்படும்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
05-12-1992

பொதுச்செயலாளர்
பிறந்தநாள் அறநிதியச்சபை.
(3763)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
1940. 04. 28

இறப்பு
1990. 12. 01



வேலுப்பிள்ளை சிவகடாட்சம
(மெக்கானிக் புளியங்கூடல்)

## குளிக்க சென்றவர் கடலில் மூழ்கி மரணமானார்

[சாவகச்சேரி]
கோப்பாய் கடலில் நண்பர்களுடன் குளிக்கச் சென்றவர் மதகினுள் சிக்குண்டதால் மூச்சுத்திணறி மரணமானார். இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை நான்கு மணியளவில் நிகழ்ந்துள்ளது. நல்லூர் முத்திரைச் சந்தையடியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான திரு. சி. கருணாநிதி (வயது 35) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். மதகினூடாக ஒரு புறத்தில் இருந்து மறுபுறத்திற்கு நீந்தி விளையாடிய போதே இச்சம்பவம் நிகழ்ந்ததாகத் தெரிகிறது. [மு]

யா/வேம்படி மகளிர் கல்லூரி

## 1993-ம் ஆண்டு 6 அனுமதி

(1992-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை அடிப்படையில்)

1992-ம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு யா/வேம்படி மகளிர் கல்லூரியில் 1993ஆம் ஆண்டுக்குரிய ஆண்டு 6 வகுப்பில் அனுமதி வழங்கப்படவுள்ளது.

அனுமதி கோரும் விண்ணப்பதாரிகள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை அதிபரிடமிருந்து பின்வரும் விபரங்களை உறுதிப்படுத்திய கடிதத்தை 10. 12. 92ற்கு முன்னர் கல்லூரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

விண்ணப்பதாரியின் பெயர் சுட்டெண், புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளி.

1992. 12. 07

அதிபர்
யா - வேம்படி மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்.
(சி-5547)

## போராளிகள் நினைவு மலர்

போராளிகளின் நினைவு மலர்கள், துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டோர், வைத்திருப்போர் எமக்கு ஆவணத்திற்கு இரு பிரதிகள் அனுப்பியுதவவும்.

மாவீரர் படிப்பகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
பலாலி வீதி,
கோண்டாவில்.

[சி-5548]

## தொழிற்சங்க கிளை திறப்புவிழா

சீமெந்து கட்டட தொழிலாளர் சங்கம்

### கோப்பாய் கிளை 07

எமது கிளைச் சங்க காரியாலயம் நாளை 9-12-92 புதன் கிழமை காலை 9.00 மணிக்கு கோப்பாயில் திறக்க உள்ளோம்.

இடம்: கோப்பாய் ஆஸ்பத்திரி வீதி,
கோப்பாய் வடக்கு
காலம்: 9 12. 92 புதன்கிழமை
நேரம்: மு. ப. 9.00 மணி

அடையாள அட்டை (இல. 721930262V) தவறிவிட்டன. கண்டெடுத் வர்கள் தயவு செய்து வ. தியாகராஜா 54/8, ஆத்திசூடி வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒ படைக் கவும். சன்மானம் வழங்கப் படும். (3769)

## பற் சிகிச்சை நிலையம்

(எஸ்.பி. சாமி கோ கட்டிடம்) யாழ். பஸ் நிலையம் அருகில் பார்வையிடும் நேரம் தினசரி 12.00 ந.ப - 2.00 பி.ப. (3230)

## புதிய முஸ்லிம் கட்சி

[கொழும்பு]

கலைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் தவிசாளருமான சேகு - இஸ்ஸதீன் தலைமையில் புதிய அரசியல் கட்சியொன்று அமைக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா முஸ்லிம் கட்சி என்று பெயர் சூட்டப் பட்டுள்ள இக் கட்சி தேர்தல் ஆணையாளரிடம் அரசியல் கட்சியாகப் பதிவு செய்து கொள்ள இருக்கிறது.

## தபால் பெட்டிகள் திருத்தப்பட்டன

[வடமராட்சி]

கரவெட்டி தபாலக எல்லைக்குள் பல ஆண்டுகளாக திருத்தப்படாமல் இருந்த தபால் பெட்டிகள் யாவும் தற்போது திருத்தம் செய்யப் பட்டுள்ளது.

தபால்பெட்டிகள் திருத்தப் பட்டதன் பின்னர் அவ்வப் பகுதி மக்கள் இப்பெட்டிகளில் தபால்களை சேர்ப்பித்து வருகின்றதையும் அவதானிக்க முடிகிறது. [யோ]

## விநாயகர் விரதம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை சிறி கற்பக விநாயகர் ஆலயத்தில் நாளை மறுதினம் வியாழக் கிழமை முதல் பிள்ளையார் கதை ஆரம்பமாக உள்ளது. தினமும் காலை 6 30 மணிக்கு பூசையும், பிள்ளையார் கதை படிப்பும் இடம்பெற உள்ளதோடு, மாலை 4-00 மணிக்கு அபிஷேகமும், ஆராதனையும் அதனைத்தொடர்ந்து லட்சார்ச்சனையும் இடம் பெறும். எதிர்வரும் 30-ம் திகதியன்று பெரும்கதைஇடம் பெறுவதோடு விநாயகர் விரதம் முற்றுப்பெறவுள்ளது.

---

வேண்டும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

1) பொதுமுகாமையாளர்: குறியீட்டு இல. 115/8

கல்வித் தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 9-வது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடத்திற்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10-வது சம்பளத் திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 06 வருட அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன், அல்லது இதற்கு இணையான பட்டத்துடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 01 வருடத்திற்குக் குறையாத அனுபவம்,

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) க பொ த. (உயர்தரம்) இல் 03 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

வயது: 23 தொடக்கம் 50க்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

பிணை: உரொக்கம் ரூ. 10,000/-, உறுதிப்பிணை ரூ. 25,000/- பெறுமதி.

சம்பளத்திட்டம்: $\frac{1005 \;—\; 1705}{40x5 \;—\; 50x10}$ உடன் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சகல படிகளும் வழங்கப்படும்.

2) கணக்காளர்: குறியீட்டு இல 104/10

கல்வித் தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 11வது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியில் ஆன 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது, கூட்டுறவுப் பணியாளரின் 12வது சம்பளத்திட்டத்திலான கணக்கு சம்பந்தமான பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது,

ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்குத் துறையிலான 02 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்,

அல்லது,

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) க. பொ. த. (உயர்தரம்) இல் கணக்கியலை உள்ளடக்கிய மூன்று பாடங்களிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் தொடர்பான துறையில் 02 வருடங்களிற்குக் குறையாத அனுபவம்.

வயது: 20 தொடக்கம் 35க்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

பிணை: உரொக்கம் ரூ. 5000/-

சம்பளத்திட்டம்: $\frac{855 \;—\; 1385}{30X7 \;—\; 40X8}$ உடன் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சகல படிகளும் வழங்கப்படும்.

1992- 12- 07

தலைவர்,
மு/ புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்
(3762)

---

பிறப்பு

1940. 04. 28

இறப்பு

1990. 12. 01



### வேலுப்பிள்ளை சிவகடாட்சம

(மெக்கானிக் புளியங்கூடல்)


ஆண்டு இரண்டு ஆனபோதும் நெஞ்சம்
மீண்டு நினைக்க நிலை தந்தவரே
ஈண்டிருந்து நாம் வாழ நின் கருணை
வேண்டி நிற்கும் எமை நினைவாயோ?

தாவடி தெற்கு,
தாவடி.

மனைவி, பிள்ளைகள்,
மைத்துனர், மைத்துனிமார்
[3765]

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் ந. பாலகுரு

(ஓய்வுபெற்ற தபால் உத்தியோகஸ்தர்)

அன்னையின் மடியில்: 02-04-1940

அன்னியன் அழிப்பில்: 22-11-1988

திதி: 08-12-1992

முத்துச்சுடர் விழியும் முறுவலதன் பேரெழிலும்
சத்துங் கடலாக்கி நெஞ்சைக் கரைக்கிறது
தாய் மண்ணின் நேசமது சேய்களெமில் விஞ்சியதால்
வாய்மண் அள்ளியிட வந்தகொடுங் கூற்றுவரால்
எம்மண்ணில் மண்ணிற்காய் உமைச் சரித்தார்
தாய்மண் பணிக்காகத் தந்தைதமை யிழந்த
சேய்கள்நாம் உம் நினைவால் துடிதுடித்து
சாந்திக்காய் வேண்டுகிறோம் நிதமும் நாம்.

பருத்தித்துறை வீதி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

அன்பு
மனைவி, பிள்ளைகள்.
(சி-5546)

---

## தொழிற்சங்க கிளை திறப்புவிழா

### சீமெந்து கட்டட தொழிலாளர் சங்கம்
### கோப்பாய் கிளை 07

எமது கிளைச் சங்க காரியாலயம் நாளை 9- 12 -92 புதன் கிழமை காலை 9. 00 மணிக்கு கோப்பாயில் திறக்க உள்ளோம்.

இடம்: கோப்பாய் ஆஸ்பத்திரி வீதி, கோப்பாய் வடக்கு

காலம்: 9 12. 92 புதன்கிழமை

நேரம்: மு. ப. 9. 00 மணி

எனவே தயவு செய்து சகல நிர்வாகிகளையும், அங்கத்தவர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

நன்றி

(3768)

கோப்பாய்
கிளைச்சங்க நிர்வாகிகள்

---

## நினைவு கூருகின்றோம் ...
## 1992-12-08

1984-ம் ஆண்டு இதே தினத்தில், யான்-ஓயாவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

★ சீலன் (ஆ. சத்தியநாதன் - பிச்சைக்குளம், முருங்கன்-வவுனியா)

1988-ம் ஆண்டு குஞ்சுக்குளம் பகுதியில், "புளொட்" தேசவிரோதிகளினால் கொல்லப்பட்ட

ரஞ்சன் (மதியாபரணம் தனராஜ் - பெரியதம்பனை, மடுகோயில்-மன்னார்)

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட 180 - யாழ் நாவலர் வீதியைச் சேர்ந்த சிற்றூர்திச் சங்கத்தலைவரான தமிழ்ப்பொதுமகன்

1989-ம் ஆண்டு யாழ்-குடாநாட்டில் பரவலாக இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட எமது ஆதரவாளர்கள் - 6 - பேர்.

1991-ம் ஆண்டு வளலாய்ப்பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

அன்ரா ஜ்/ இன்பராஜ் (தங்கராசா ஜெயசீலன்-அந்திரான் குடியிருப்பு, மண்டான், கரணவாய் தெற்கு கரவெட்டி-யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/5545)

சிந்தனைக்கு

உழைக்காமல் வாழ்பவர், உலகில் அதிகம் வாழாமல் உழைப்பவர், அவர்களிலும் அதிகம்.
— சார்ல்ஸ் ஆர். பிறௌன்

# தமிழ்த் தேசியவாதத்தின் வெளிப்பாடாக தலைவர் பிரபாகரன் எழுந்து நிற்கிறார்

**- பிரபல பத்திரிகையாளர் காமினி நவரெட்ணா**

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 08- 12- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## 'பகற் கொள்ளை'

பச்சை மிளகாய் ஒரு கிலோ 75 ரூபா. அரைக் கிலோ 37. 50 சதம், கால் கிலோ 20. 00 ரூபா. 100 கிராம் 10 ரூபா.

கத்தரிக்காய் ஒரு கிலோ 45 ரூபா அரைக் கிலோ 23 ரூபா, கால் கிலோ 12 ரூபா.

இன்று யாழ். குடாநாட்டில் இருக்கும் சந்தைகளில் நிறைக்கும்- பொருளுக்கும் உள்ள விலை தொடர்பு இவ்வாறே அமைந்துள்ளது. அதாவது, ஒரு கிலோ பச்சை மிளகாயை மொத்தமாகக் கொள்வனவு செய்பவர் அதனை 75 ரூபாவிற்கும், 100 கிராம் பச்சைமிளகாயைக் கொள்வனவு செய்பவர் 10 ரூபா வீதம், அதாவது கிலோ 100 ரூபா என்ற ரீதியில் கொள்வனவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளது.

இதேவேளை, வேறு பல பொருள்களின் விலை கடைக்குக் கடையும், இரவு பகல் என்பனவற்றிற்கு ஏற்பவும் பெருமளவில்வேறுபடுகின்றது. இதில் மருந்துப் பொருள்களின் விலை வேறுபாடு உயர்வானதாகும். யாழ்ப்பாணத்தில் சாதாரணமாக 90 ரூபாவிற்கும் 100 ரூபாவிற்கும் இடையில் விற்பனையாகும் மனோகிளாக்ஸ் என்ற வியாபாரப் பெயருடைய குளுக்கோசின் சோடியம் B. P. என்ற குழந்தைகளுக்கான மருந்து ஓர் பார்மஸியில் மாலை 6. 00 மணிக்குப் பின்னர் 190 ரூபாவிற்கு விற்பனையாகியுள்ளது. அதாவது சுமார் 100 வீத அதிகரிப்பில் அம் மருந்து விற்பனை செய்யப்படுகின்றது.

போர் சூழ்நிலை, பொருளாதாரத் தடை, மருந்துப் பொருள் தடை, எரிபொருள் தடை என்பவற்றின் காரணமாக தமிழ் பகுதி எங்கும் சகல பொருள்களின் விலைகளும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளமை பொதுவானதொரு அம்சம் ஆகும். இந் நிலை தவிர்க்கமுடியாதது. ஆகையினால் நியாயமான விலை ஏற்றம் இதில் குறிப்பிடப்படவில்லை.

ஆனால், மேலே குறிப்பிட்டவாறு அளவிற்கும் - பொருளுக்கும், இரவிற்கும் – பகலுக்கும் இடையில் உள்ள விலை வேறுபாடு என்பது உருவாவதற்கு நியாயம் எதுவும் இருப்பதாக தெரிய

---

இனப்பிரச்சினை என்பதிலிருந்து சிறிலங்கா விடுபடுமா? வடக்கு-கிழக்கு பகுதிகளில் நடக்கும் சம்பவங்கள் பற்றி எல்லாத்தரப்பு அரசியல் வாதிகளும், இப்போது இராணுவ உயர்மட்டத்தினரும் கூறுகருத்துக்களைப் படிக்கும் போது இந்தக் கேள்வி எழுவது இயல்பானதே.

பிரபாகரன் மட்டும்தான் இங்கு முழுக் கதாநாயகன் இல்லை அவரை ஹிட்லரோடும், நெப்போலியனோடும் ஒப்பிட்டுச் சிலர் பேசக்கூடும். ஆனால் தமிழ்த்தேசியவாதத்தின் வெளிப்பாடாக அவர்எழுந்து நிற்கிறார் என்பதை எவரும் மறுக்க முடியாது.

அரசியல்வாதிகளும், மதகுருமாரும், மற்றும் பிற அமைப்புக்களும் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் விடுக்கும் வேண்டுகோள்களால் மட்டும் இந்த போருக்கு முடிவுகாண முடியாது.

அரசாங்கத்தின் நிர்வாக ஆணைகள் எதுவும் வவுனியாவிற்கு அப்பால் செல்லுபடியற்றவை என்பதே கசப்பான உண்மையாகும். (கொழும்பிலிருந்து 160 மைல்களுக்கப்பால் இருக்கும் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் 90 மைல் தொலைவில் உள்ளது.) இது ஏன்?

எல்லாத் தமிழர்களும் சிங்களவர்களுக்கு, முஸ்லிம்களுக்கு அல்லது அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் அல்ல என்பதை இங்கு நாம் மறந்து விடமுடியாது அல்லது தமிழர்கள் எல்லோரும் புலிகள் என்பதும் அல்ல. தமிழர்களில் பெரும்பான்மையோர் அமைதியோடு வாழவே விரும்புகின்றனர். தமது குழந்தைகளை படிக்க வைத்து வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுத்து திருமணம் செய்து வைத்து ஒரு சாதாரண மனிதனின் வாழ்க்கையை நடத்தவே அவர்கள் விரும்புகின்றனர். ஆனால் இவற்றுக்கான வாய்ப்புகள் மறுக்கப்படுகிறது ஆனால் தமிழர்களுக்கு போது அவர்கள் போராடாமல் இருப்பர் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

1956-ல் சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாக எஸ். டபிள்யூ ஆர். டி பண்டாரநாயக்காவினால் அமுல் செய்யப்பட்டது. பண்டாரநாயக்காவை எதிர்த்தவர்கள் கூட சிங்கள மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு ஆதரவு காட்டினார்கள். இதன் மூலம் சிறிலங்காவின் அரசியலில் சாதாரண மக்களுக்கான இடத்தைப் பெற்றுக் கொடுத்தவர் என்று அவர் பெருமைப்படுத்தப்பட்டார். ஆனால் இதன் மூலம் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக தமிழர்கள் அந்நியப்படுத்தப்பட்டனர். தமிழ்மொழி அமுலாக்கல் தொடர்பாகவிசேட சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதும் அவை பெரும்பாலும் இன்றுவரை ஏட்டளவிலேயே உள்ளன

மூன்றிலிருபங்கு பெரும்பான்மைப் பலத்துடன் 1970-ல் ஆட்சிபீடமேறியபோது திருமதி சிறிமாவோவிற்கு அருமையானதொரு சந்தர்ப்பம் வாய்த்திருந்தது ஆனால் பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் முறையை புகுத்தியதன் மூலம் இன உறவுகளை அவர் மேலும் சீர்கெடச் செய்தார். ஒன்றைச் சரிசெய்வதற்காக இன்னொரு தவறை அவர் இழைத்தார்.

1972இல் புதிய அரசியலமைப்பு சட்டம் வரையப்பட்ட போது 1957இன் பண்டா—செல்வா உடன்பாட்டின் அடிப்படையில் எஸ். ஜே வி. செல்வநாயகம் முன்வைத்த அம்சங்கள் ஏற்றுக்கொள்ளப்படாமல் போனது. இது ஏற்கப்பட்டிருந்தால் ஒருஇணக்கப்பாடு தோன்றியிருக்கலாம். ஆனால் இவை புறக்கணிக்கப்பட்ட சூழலில்தன் செல்வநாயகமும் அவரது ஆதரவாளர்களும் இந்தப் புதிய அரசியல் அமைப்பு சிங்களவர்களுக்கு எல்லாவற்றையும் தரு எதுவுமில்லை என்று கூறத் தொடங்கினர். எனவே தமிழர்களுக்கென தனியரசு ஒன்று அமைக்கப்பட்டால்தான் தமிழர்கள் தன்மானத்தோடும் கௌரவத்தோடும் வாழமுடியும் என்று எண்ணத் தலைப்பட்டனர்.

இதுகாலவரை தமிழர்கள் தரப்பிலிருந்து தனியரசுபற்றி எந்தப் பேச்சும் எழுந்திருக்கவில்லை. சமஷ்டி அரசியலமைப்பு பற்றியும், எல்லா மாகாணங்களுக்குமான பிரதேச சுயாட்சி பற்றியுமே பேசப்பட்டு வந்தது. வடக்கு, கிழக்கு இணைப்பு என்பது அப்போது நிகழ்ச்சி நிரலில் கூட இல்லை.

> இனப்பிரச்சினையில் தவற விடப்பட்ட தருணங்கள் என்ற தலையங்கத்தின் கீழ், சண்டே ரைம்ஸ் வெளியிட்டுள்ள கட்டுரையின் ஒரு பகுதி இது. யாழ்ப்பாணத்திலிருந்து முன்னர் வெளிவந்த சற்றடே ரிவியூ வார இதழின் ஆசிரியரானகாமினிநவரெட்ணா இக் கட்டுரையை எழுதியுள்ளார்.

இதன் பின்னர்தான் சமஷ்டிக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியாகியதும் வட்டுக்கோட்டைப் பிரகடனம் நிறைவேற்றப்பட்டதும் ஆகும்.

ஏற்கனவே புண்பட்டிருந்த காயத்தை ஆற்றக் கூடியவவுக்கு பலம் வாய்ந்தவராகவும், ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மைப் பலத்தோடும் ஜே. ஆர்.ஜெயவர்த்தனா 1977இல் ஆட்சிக்கு வந்தார். ஐ தே க. சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களுக்கிடையிலான ஆரம்ப மோதல்கள் வெகுவிரைவில் இனவாதவடிவம்பெற்றுகலவரம் மூண்டது. ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூட்டணியினரோடு பேச்சுவார்த்தை எனத் தொடர்ந்த போதும் 1983இல் வன்செயல் ஏற்படுவதை தடுக்க அவரால் இயலவில்லை.

செல்வநாயகத்தின் மருமகனான ஏ. ஜே. வில்சன் போன்றவர்கள் கூட பேச்சுக்களில் நம்பிக்கையிழந்தனர். அவர் பின்னர் சிங்களவர்- தமிழர்களுக்கு இடையிலான முரண்பாடு பற்றி ஒரு புத்தகமும் விரிவான முறையில் எழுதியுள்ளார். இலங்கையில் பிரிவினையை தவிர்க்க விரும்பும் எவரும் கட்டாயம் வாசிக்க வேண்டிய நூல் இது.

இப்போது தமிழும் தேசிய மொழிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டு உள்ளது. ஆனால் என்ன பயன்? இதனை அமுலாக்க தேவையான அலுவலக வசதியோ, அதிகாரிகளோ, மொழி பெயர்ப்பாளர்களோ ஏன் தட்டச்சு இயந்திரங்கள் கூட இல்லாதநிலையில் இதன் பயன் என்ன? நீதிமன்ற நடவடிக்கைகளைக் கூட தமிழில் அல்லது ஆங்கிலத்தில் பெறுவதற்கான சிரமம் இன்னமும் நீங்கவில்லை.

1983-ம் ஆண்டு வன்செயலுக்குப் பின்னர் அரசியலமைப்பிற்கான ஆறாவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், ஆகியோர் ஒற்றையாட்சி அமைப்பை ஏற்பதாக சத்தியம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். என்ன பயன் விளைந்தது? நிர்ப்பந்தத்தின் கீழ் சத்தியப் பிரமாணம் செய்ய தமிழ்த் தலைவர் மறுத்த நிலையில் யாருடன் பேசுவது என்று தெரியாத குழப்பம் தான் சிங்களவர்களுக்கு ஏற்பட்டது.

எனவே தான் இந்த நிலைமைகள் எல்லாம் ஏற்படுவதற்கு விடுதலைப் புலிகளை மட்டும் குற்றம் சாட்டுவது எவ்வகையிலும்பொருந்தாது இதற்கான பொறுப்பை சிங்களத் தலைவர்களும்ஏற்கவேண்டும்.

### இராணுவத்தீர்வு

24 செப்டம்பர் 1984இல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த சற்றடே ரிவியூ இதழில் புலிகளைப் பேச்சுக்கு அழையுங்கள் என்றும் எழுதினேன். இதைத் தொடர்ந்து என்னைப் பேசுவதற்கு அழைத்த ஜெயவர்த்தனா, பிரச்சினையைத் தணிப்பதற்கு செய்யக் கூடியதுயாது என்பது தொடர்பாக ஆலோசனை கலந்தார்.

அவரது ஆசீர்வாதத்துடன் சென்னைக்கு சென்ற நான் அங்கிருந்த இயக்கத்தின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்தினேன் இரண்டு வாரப் பேச்சுக்களுக்குப்பின்னர், அவர்களால் முன்வைக்கப்பட்ட சில கோரிக்கைகளோடு கொழும்புக்கு திரும்பினேன். அவை நியாயமானவை என்று நான் கருதியபோதும் இராணுவ ரீதியாக இப் பிரச்சினையைத் தீர்க்கவே அப்போது சில அமைச்சர்கள் முயன்றனர்

இதன் பின் 1987-ல் இந்தியப் படைகள் தேவையற்ற வகையில் இங்கு வரவழைக்கப்பட்டதும். மூன்றாண்டுகளுக்குப் பின்னர் விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையினால் அவை வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டதும் தெரிந்ததே. எனினும் இந்தப் பேச்சுவார்த்தைகள் நல்ல முடிவுக்கு இட்டுச் செல்லாமல் முறிவடைந்து போக ஜூன் 1990-ல் மீண்டும் போர் வெடித்தது.

ஒரு தேசம் என்ற வகையில பெருமளவு இரத்தம் சிந்தப்படுவதோடு பதினைந்து மில்லியன் ரூபாய்களை செலவிட்டும், 15 சதவீதத்திற்கு மேலாக வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சிற்கு ஒதுக்கியும், அரசு, மற்றும் தனியார் உடைமைகளைப் பெருமளவில் சேதப்படுத்தியும் இதுவரையில் என்ன தான் சாதிக்கப்பட்டது? இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தவிர வேறுவழி எதுவுமில்லை என்பதை இத் தருணத்திலாவது ஒப்புக்கொள்ளவேண்டும். இராணுவ ரீதியாக மேற்கொள்ளப்பட்ட அணுகுமுறை கடந்த பதினைந்து ஆண்டுகளில் தோல்விகண்டுவிட்டது.

---

# இந்தியாவின் பண்புச் சூழல்

பாடசாலை மாணவருக்கு

சோடியம் B. P. என்ற குழந்தைகளுக்கான மருந்து ஓர் பார்மஸியில் மாலை 6.00 மணிக்குப் பின்னர் 190 ரூபாவிற்கு விற்பனையாகியுள்ளது. அதாவது சுமார் 100 வீத அதிகரிப்பில் அம் மருந்து விற்பனை செய்யப்படுகின்றது.

போர் சூழ்நிலை, பொருளாதாரத் தடை, மருந்துப் பொருள் தடை, எரிபொருள் தடை என்பவற்றின் காரணமாக தமிழ் பகுதி எங்கும் சகல பொருள்களின் விலைகளும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளமை பொதுவானதொரு அம்சம் ஆகும். இந் நிலை தவிர்க்கமுடியாதது. ஆகையினால் நியாயமான விலை ஏற்றம் இதில் குறிப்பிடப்படவில்லை.

ஆனால், மேலே குறிப்பிட்டவாறு அளவிற்கும் - பொருளுக்கும், இரவிற்கும் – பகலுக்கும் இடையில் உள்ள விலை வேறுபாடு என்பது உருவாவதற்கு நியாயம் எதுவும் இருப்பதாக தெரியவில்லை. நூறுகிராம் 'படி' ஒரு கிலோவின் பத்தில் ஒன்று என்பதை மரக்கறி வர்த்தகர்கள் ஏன் ஏற்பதில்லை?, அல்லது 50 சதம், ஒரு ரூபா, இரண்டு ரூபா என்பனவெல்லாம் தம்மைப்பொறுத்து மட்டுமே பெறுமதியானவை.மற்றவர்களைப்பொறுத்து பெறுமதி அற்றவை என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது எவ்வாறு?

இதேவேளை, சிலவர்த்தகர்கள் தமது கடைகளில் உள்ள பொருள்களின் விலை அதிகரிப்பிற்கு தாம் கொள்வனவு செய்தபோது உயர்ந்த விலையில் கொள்வனவு செய்ததாக விளக்கம் அளிக்க முற்பட்டுள்ளார்கள். ஆனால், இது ஏற்புடைய தொன்றல்ல. வர்த்தகர்கள் பொதுவாகவே சந்தைவிலை அறிந்தே கொள்வனவு செய்கின்றனர். சந்தை விலை அறியாது கொள்வனவு செய்யும் வியாபாரி எவரும் வியாபாரியாக இருக்கமுடியாது.

இந்நிலையில் சந்தை விலைக்கு அதிகமாக ஒரு வர்த்தகரிடம் கூடுதலான பொருள்கள் இருப்பின் அவை அதிக விலைக்கு விற்கவென பதுக்கப்பட்ட பொருள்களாகவே இருக்க முடியும் அதாவது கொள்ளை லாப நோக்கில் ஏற்கனவே பதுக்கப்பட்ட பொருள்களாகும்.

அதாவது, கடந்த வாரம் கிளாலிக் கடற்பரப்பில் பயணிகள் படகு மூழ்கடிக்கப்பட்டதாக வெளிவந்த வதந்திகளைத் தொடர்ந்து லீற்றர் 50 ரூபாவில் இருந்து 55 ரூபா வரை விற்பனையாகி வந்த மண்ணெண்ணெய் திடீரென விற்பனை நிலையங்களில் இருந்து மறைந்தன ஒரு லீற்றர் 125 ரூபாவிற்கும் கொள்வனவு செய்யமுடியாத நிலை ஏற்பட்டது. ஆனால் வெளிவந்தவை வதந்தி என்பதன் பின் மண்ணெண்ணெய் மீண்டும் பழைய விலைக்கு திரும்பியுள்ளது. இந் நிலையில் கொள்ளை லாப முயற்சி தோல்வி அடைந்தது. இத்தோல்வியை வியாபாரிகள் தமக்கு ஏற்பட்டநட்டமாகவேதெரிவித்துக் கொள்வார்கள். ஆனால், இவ்வாறு கூறிக் கொள்வது ஒரு மோசடியாகும்.

மோசடி நடவடிக்கைகள் மேற் கூறப்பட்டவாறு வியாபாரிகள் நடத்தும் ஒரு பகற்கொள்ளை போன்றது. இது காரணம் கற்பிக்க முடியாத ஏமாற்று நடவடிக்கையாகும். ஏழை மக்களைப் பெரிதும் துன்புறுத்தும் ஒரு செயலுமாகும்.

---

களுக்கு அல்லது அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் அல்ல என்பதை இங்கு நாம் மறந்து விடமுடியாது அல்லது தமிழர்கள் எல்லோரும் புலிகள் என்பதும் அல்ல. தமிழர்களில் பெரும்பான்மையோர் அமைதியோடு வாழவே விரும்புகின்றனர். தமது குழந்தைகளை படிக்க வைத்து வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுத்து திருமணம் செய்து வைத்து ஒரு சாதாரண மனிதனின் வாழ்க்கையை நடத்தவே அவர்கள் விரும்புகின்றனர் ஆனால் இவற்றுக்கான வாய்ப்புகள் மறுக்கப்படுகிறது

1972இல் புதிய அரசியலமைப்பு சட்டம் வரையப்பட்ட போது 1957இன் பண்டா—செல்வா உடன்பாட்டின் அடிப்படையில் எஸ். ஜே வி. செல்வநாயகம் முன்வைத்த அம்சங்கள் ஏற்றுக்கொள்ளப் படாமல் போனது. இது ஏற்கப்பட்டிருந்தால் ஒருஇணக்கப்பாடு தோன்றியிருக்கலாம். ஆனால் இவை புறக்கணிக்கப் பட்ட சூழலில் தன் செல்வநாயகமும் அவரது ஆதரவாளர்களும் இந்தப் புதிய அரசியல் அமைப்பு சிங்களவர்களுக்கு எல்லாவற்றையும் தரு ... ஆனால் தமிழர்களுக்கு

கூட்டணியாகியதும் வட்டுக் கோட்டைப் பிரகடனம் நிறைவேற்றப்பட்டதும் ஆகும்.

ஏற்கனவே புண்பட்டிருந்த காயத்தை ஆற்றக் கூடியவருக்கு பலம் வாய்ந்தவராகவும், ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மைப் பலத்தோடும் ஜே. ஆர்.ஜெயவர்த்தனா 1977இல் ஆட்சிக்கு வந்தார். ஐ. தே. க. சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களுக்கிடையிலான ஆரம்ப மோதல்கள் வெகுவிரைவில் இனவாதவடிவம்பெற்றுகலவரம் மூண்டது. ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூட்டணியினரோடு பேச்சு

...னர். என்ன பயன் விளைந்தது? நிர்ப்பந்தத்தின் கீழ் சத்தியப் பிரமாணம் செய்ய தமிழ்த் தலைவர் மறுத்த நிலையில் யாருடன் பேசுவது என்று தெரியாத குழப்பம் தான் சிங்களவர்களுக்கு ஏற்பட்டது

எனவே தான் இந்த நிலைமைகள் எல்லாம் ஏற்படுவதற்கு விடுதலைப் புலிகளை மட்டும் குற்றம் சாட்டுவது எவ்வகையிலும்பொருந்தாது இதற்கான பொறுப்பை சிங்களத் தலைவர்களும்ஏற்கவேண்டும்.

### இராணுவத்தீர்வு

24 செப்டம்பர் 1984இல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளி

...தப்படுவதோடு பதினைந்து மில்லியன் ரூபாய்களை செலவிட்டும், 15 சதவீதத்திற்கு மேலாக வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சிற்கு ஒதுக்கியும், அரசு, மற்றும் தனியார் உடைமைகளைப் பெருமளவில் சேதப்படுத்தியும் இதுவரையில் என்ன தான் சாதிக்கப்பட்டது? இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தவிர வேறுவழி எதுவுமில்லை என்பதை இத் தருணத்திலாவது ஒப்புக்கொள்ளவேண்டும்' இராணுவ ரீதியாக மேற்கொள்ளப்பட்ட அணுகுமுறை கடந்த பதினைந்து ஆண்டுகளில் தோல்விகண்டுவிட்டது.

---

# இந்தியாவின் பண்புச் சூழல் சேதமாக்கப்பட்டு விட்டது

## - இந்தியக் குடியரசுத் தலைவர் கவலை

(டில்லி)

அயோத்தியாவில் நேற்று முன்தினமிரவு பாபர் மசூதி வளாகம் சேதப்படுத்தப்பட்ட செயலுக்கு இந்தியக்குடியரசுத் தலைவர் வன்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா வெளியிட்டஅறிக்கையில்; இத்தகைய செயல்கள் இந்துசமயம் உட்பட எல்லாப் பெரும் சமயங்களும் வலியுறுத்தும் நெறிகளுக்கும், நடை முறைகளுக்கும் முற்றிலும் முரணானதாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் மசூதிக் கட்டடத்திற்கு சேதம் விளைவித்தவர்கள், இந் நாட்டின் சுதந்திரப் போராட்டத்திலும்,தேசிய புனரமைப்பு இயக்கத்திலும் முன்னின்ற பெரும் தலைவர்கள் பேணிவந்த இந்தியாவின் பண்புச் சூழ்நிலையை சேதப்படுத்திவிட்டார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# மசூதி சேதமாக்கப்பட்டது பெரும் வெட்கக்கேடானது

## -இந்தியப் பிரதமர் கண்டனம்

(டில்லி)

பாரதீய ஜனதாக் கட்சி, விஷ்வ இந்து பரிஷத் கூட்டணியின் இந்தச் செயல் நாட்டுக்கு இழைக்கப்பட்ட பெரும் துரோகமாகும் என்று பிரதமர் பி வி. நரசிம்மராவ் நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் விடுத்த அறிக்கையில் கூறியுள்ளார்.

அதில் மேலும் அவர் கூறுகையில்; பிரச்சினைக்கு தீர்வு காண பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டபோது பாரதீய ஜனதாவும், விஷ்வ இந்து பரிஷத்தும் ஒத்துழைப்பு தரவில்லை என்றும், மசூதிக் கட்டடம் சேதமாக்கப்பட்டமை பெரும் வெட்கக் கேடானது என்றும், நாட்டின் மதச் சார்பற்ற ஜனநாயக அமைப்பிற்கு ஏற்படுத்தப்பட்ட களங்கம் என்றும் அவர் குறிப்பிட்டார். அத்துடன், அயோத்தியாவில் சர்ச்சைக்குரிய கட்டட அமைப்பைப் பாதுகாக்கத் தவறியஉத்தரப் பிரதேசஅரசு கலைக்கப்பட்டதாகவும்,நாட்டின் அமைதியையும் சாந்தியையும்ஆபத்திற்குஉள்ளாக்கியசக்திகளுக்கு எதிராக எத்தகைய நடவடிக்கையை எடுக்கவும் தமது அரசு தயங்காது என்றும் அவர் தெரிவித்தார்.

# தொண்டர்களின் செயலால் பலத்த பின்னடைவு

## - ஏ. பி. வாஜ்பாய்

(டில்லி)

ஆலய இயக்கத்தின் நம்பகத்தன்மைக்கு கரசேவையில் ஈடுபட்ட தொண்டர்களின் செயல் ஒரு பலத்த பின்னடைவாகும் என்று. பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான அடல் பிகாரி வாஜ்பாய் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஆர். எஸ். எஸ்ஸின் கூட்டுச் செயலாளர்களில் ஒருவரான பேராசிரியர் ராஜேந்திர சிங் புதுடில்லியில் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், நேற்று முன்தினம் அயோத்தியாவில் இடம் பெற்ற சம்பவங்கள் ஸ்தாபனத்தின் லட்சியங்களை பெரிதும்சேதப்படுத்தி விட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# சுவிஸ் மக்கள் எதிர்ப்பு

(பொன்)

ஐரோப்பிய பொருளாதாரப் பரப்பிற்குள் சுவிட்சர்லாந்தையும் இணைக்க அரசாங்கம் முன்வைத்த யோசனையை சுவிஸ் மக்கள் நிராகரித்துள்ளனர்.

இந்த முடிவுகளையடுத்து செய்தியாளர்கள் மத்தியில் பேசிய சுவிஸ் பிரதமர் சுவிட்சர்லாந்து அரசாங்கம் தனது ஐரோப்பியக் கொள்கை தொடர்பாக மறுபரிசீலனை செய்ய இருப்பதாகவும், குறிப்பாக ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் இணைவது தொடர்பாக தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

சுவிட்சர்லாந்துநாட்டின்மேற்குப் பகுதியில் பெரும்பான்மையாக வாழும் பிரெஞ்சு மொழி பேசுவோர் ஐரோப்பியசமூகத்தில் இணைவதற்கு ஆதரவாகவும், கிழக்குப்பகுதியில் பெரும்பான்மையாக வாழும் ஜேர்மன் மொழி பேசுவோர் இதற்கு எதிராகவும் வாக்களித்துள்ளனர்,

---

பாடசாலை மாணவருக்கு

# எயிட்ஸ்பற்றி விளக்கமளிக்க கல்வி அமைச்சு முயற்சி

[கொழும்பு]

எயிட்ஸ் நோய் பற்றி பாடசாலைப் பிள்ளைகளுக்கு விளக்கம் அளிப்பதற்கான முயற்சியொன்றை கல்வி அமைச்சு மேற்கொள்ள இருக்கின்றது. இது தொடர்பாக தேசிய கல்வியியல் நிலையம் சுற்றறிக்கை ஒன்றை பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

எயிட்ஸ் நோயை ஏற்படுத்தும் வைரசுகளின் இயல்பு பற்றியும் இந் நோயினால் ஏற்படும் விளைவுகளைப் பற்றியும் எயிட்ஸ் நோய் பரவும் முறை பற்றியும் ஆண்டு 8 இல் இருந்து ஆண்டு 13 வரை பயிலும் மாணவர்களுக்கு விளக்கம் அளிக்கத் திட்டம் இடப்பட்டுள்ளது.

எயிட்ஸ் நோயின் பயங்கரத் தன்மை பற்றி பிள்ளைகள் இளம் வயதிலேயே அறிந்திருந்தால் அவர்கள் முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்வார்கள் என்பதனாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# வெளியுறவுச் செயலர்கள் மாநாடு நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

சார்க் அமைப்பு நாடுகளின் வெளியுறவுச் செயலர்களின் மாநாடு நேற்று டாக்காவில் ஆரம்பமாகியது. மூன்று நாட்கள் தொடரும் இம் மாநாட்டில் பன்னிரண்டாம் திகதி ஆரம்பமாகும் சார்க் உச்சி மாநாட்டின் அலுவல் பட்டியல் பூர்த்தி செய்யப்படுவதுடன்,பிரகடன முன்வரைவுகளும் தயாரிக்கப்படவிருக்கிறது.

# தமிழில் ஆவணம் தயாரிக்க ஆசிரியரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அரசாங்க சேவையில் இருந்து ஒய்வு பெறும் ஆசிரியர்கள், அதிபர்கள் ஒய்வு பெறுவதற்கான சகலஆவணங்களும் தமிழிலேயே தயாரித்து தமிழிலேயே பூர்த்தி செய்யப்பட்டு யாழ். செயலகத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் உத்தரவிட்டுள்ளார். இதுவரை ஒய்வூதியம் பெறுவதற்கான ஆவணங்கள் யாவும் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் இருந்தனவென்றும், அம்மொழிகளிலேயே படிவங்கள் பூர்த்தியாக்கப்பட்டு கொழும்பு ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டிருந்தன. இதனால் மாதக்கணக்கில் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் பெறாது ஓய்வூதியக்காரர்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகினர். எனவே யாழ். செயலகத்தினால் இனி ஓய்வூதிய வேலைகள் மேற்கொள்ள இருப்பதால் இனி ஓய்வு பெறுகின்ற ஆசிரிய, அதிபர்களின் விண்ணப்பப்படிவத் தொகுதி, வரலாற்றுத் தாள்கள் போன்றன தமிழிலே தயாரித்து தமிழிலேயே பூர்த்தி செய்து சமர்ப்பிக்க யாழ். கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (பா)

ஈழநாதம்

# புலிகள்-ஜே.வி.பி. தொடர்பு; பொலிஸ்தரப்பில்சந்தேகமாம்

(கொழும்பு)

ஜே.வி.பி.யினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையேயான தொடர்புகள் வலுத்து வருகிறதா என்ற சந்தேகம் பொலிசாருக்குத் தோன்றியுள்ளது. அண்மையில் பொலநறுவ பகுதியில் கைது செய்யபபட்ட இரண்டு ஜே வி பி யினர் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களும், ரவைகளும் வழங்கியதாக கூறியிருபபதையடுத்து இச் சந்தேகம் பொலிசாருக்கு எழுந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஜே வி பி யின் உயர் பீடத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் இருவர் விடுதலைப் புலிகளுக்கு டோர்ச் பற்றரிகள்மற்றும் பொருள்கள் வழங்கியதாகவும், இவர்களுக்கு விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும் நம்பப்படுகிறது.

இத்தகைய ஜே வி பி யுடனான தொடர்புகள் மூலமாகத்தான் கொழும்பினுள் புலிகள் ஊடுருவ முடிந்துள்ளது என்றும் பொலிஸ் வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன. அண்மையில் நாஹுஓயாப் பகுதியில் ஜே.வி.பி யினர் தமிழ் இளைஞர் மத்தியில் ஆட்சேர்ப்பு நடத்தியுள்ளமை இச் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தி இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## உணவுப்பொருள் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

யூன், யூலை, ஓகட்ஸ், செப்ரெம்பர் ஆகிய மாதங்களுக்கான பாடசாலைப் பிள்ளைகளின் மதிய உணவு முத்திரைகளுக்கு உணவுப் பொருள்களை விநியோகிக்க யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கென சுமார் 22 பல நோ.கூ. சங்கங்களுக்கு 349 மெற்றிக் தொன் சீனி, 494 மெற்றிக் தொன் அரிசி, 23 மெற்றிக் தொன் கடலை என்பன வழங்கப்பட்டுள்ளன என யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி அறிவித்துள்ளது.

## டாக்கா 'சார்க்' மாநாடு நடைபெறுவது சந்தேகம்

சார்க் உச்சிமாநாடு முன்பு திட்டமிடப்பட்டிருந்தபடி நடைபெறும் என தான் நம்பவில்லை என்று பங்காளதேஷ் வெளியுறவுச் செயலாளர் றியாம் ஹெக்மன் கூறியுள்ளார்.

சார்க் மாநாட்டில் பங்குபற்ற தாம் வரப்போவதில்லை என்று இதுவரை யாரும் அறிவிக்கவில்லை என்று கூறிய அவர், பிரதிநிதிகள் வரும் பட்சத்தில் மாநாடு நடைபெறும் என்றும் கூறினார்.

## மசூதியை உடன் கட்ட கம்யூ. கட்சி கோரிக்கை

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மாக்சிய கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த மூவர் அடங்கிய குழு பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்து அயோத்தியில் பாபர் மசூதி அழிக்கப்பட்ட இடத்தில் மீண்டும் மசூதியைக் உடனடியாகக் கட்டவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

இதற்குக் காரணமானவர் தண்டிக்கப்படவேண்டும் என்றும்பிரதமரைவலியுறுத்தினர்

## கவனிப்பாரற்ற நிலையில் இறந்து கிடந்த வயோதிபர்

(வடமராட்சி)

கரவெட்டி துன்னாலையில் வயோதிபர் ஒருவர் பூட்டிய வீட்டினுள் மூன்று தினங்களாக இறந்து கிடந்துள்ளார்.

ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்தம்பையா - இராசரத்தினம் (வயது68) என்பவரே இறந்து கிடந்தவரென அடையாளம் காணப்பட்டது.

இது பற்றி மேலும் தெரிய வருகையில், இவரது ஓய்வூதிய வவுச்சரை தபாலக ஊழியர் இவரது வீட்டுக்கு எடுத்துச் சென்று அழைத்தபோது எவரும் வராததால் உள்ளே பார்த்த தபாலக ஊழியர் அவர் இறந்து கிடப்பதைஅவதானித்தார். இவர்இயற்கைமரணம் அடைதிருப்பதாக மரணவிசாரணையின் போது தெரிய வந்துள்ளது.

### இந்தியாவில்

ஏந்திய இந்து-முஸ்லிம் குழுக்களுக்கிடையே நிகழ்ந்த சண்டையில் 16 பேர்வரை கொல்லப்பட்டனர்.

சென்னையில் ஏற்பட்ட கலவரத்தில் 19 பேர் இறந்தனர். அதில் 13 பேர் பொலிசாரது துப்பாக்கிச் சூட்டில் இறந்தனர். ஆந்திர மாநிலத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மொத்தம் 7, கேரளாவின் தலைநகர் திருவனந்தபுரத்தில் குண்டு வெடித்து இருவர் இறந்தனர். இதுவரை இக் கலகங்களில் தென் மாநிலங்களில் இறந்தவரின் எண்ணிக்கை 28 எனத் தெரிய வருகிறது.

### பிரதமர்

முஸ்லிம் தலைவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை ஆதரிக்கவும் ஜனதா தளம் தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் முடிவு செய்துள்ளன.

இதேவேளை பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் நேற்றுக் குழப்பம் நிலவியது.

லோக் சபையில் மையப் பகுதிக்கு முன்னேறிய காங்கிரஸ் மற்றும் எதிர்க் கட்சி உறுப்பினர் கோஷங்கள் எழுப்பினர்.

### இஸ்லாமிய நாடு

வன்செயல்களைத் தடுத்து நிறுத்தாமல் பார்த்துக் கொண்டு நின்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிந்து மாகாணத்தில் 15 லட்சம் இந்து மக்கள் வாழ்கின்றனர். இங்கு பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுக்கூர் மற்றும் ஹைதராபாத் பகுதிகளில் கூட்டத்தைக் கலைக்க கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பொலிசார் பயன்படுத்தியுள்ளனர். இப்பகுதியில் 14 இந்துக் கோவில்கள் உடைக்கப்பட்டுள்ளன. கோவிலை உடைக்கச் சென்றவர்களில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### இஸ்லாமிய

மத்திய கிழக்கு இஸ்லாமிய நாடுகள் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன.

''பாபர் மசூதி உடைக்கப்பட்டது காட்டுமிராண்டித்தனமான செயல்'' என்று இஸ்லாமிய நாடுகள் அமைப்புக் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஈரான் தனது கண்டனத்தில் ''மசூதி உடைக்கப்பட்ட செயல் வெக்ககரமான விடயம்'' எனத்தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட பங்களாதேஷ் பிரதமர் பேகம் கலிதாஷியா மசூதி உடைக்கப்பட்ட செய்தியால் தான் பெரிதும் கவலையும் கலக்கமும் அடைந்ததாக தெரிவித்தார்.

பங்களாதேசில் பல இந்து ஆலயங்கள் முஸ்லிம் அடிப்படை வாதிகளால் தாக்கப்பட்டன.

பங்களாதேசில் முஸ்லிம்கள் கண்டன ஊர்வலம் ஒன்றையும் நடத்தினர்.


மேலும் இந்தியன் ஏயர்லயன்ஸ் காரியாலயமும், இந்திய தகவல் மையமும், பங்களாதேஸ் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயமும் தீயிடப்பட்டன. டாக்கா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருந்த இந்தியா - பங்களாதேஸ் கிரிக்கட் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தையும் விஷமிகள் குழப்பினர்.

வளைகுடாப் பகுதியில் இருந்த ஒரேஒரு இந்துக் கோவிலும் தாக்கப்பட்டுள்ளது. எதிர்ப்பாளர்கள் மசூதி உடைக்கப்பட்ட செய்தியைக் கேட்டதும் கோவில்களைத் தாக்கியுள்ளனர் டுபாய் பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்


## வெளிவந்து விட்டது

**'போராளியின் குருதிச் சுவடுகள்'**

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப்புலிகள்' இதழ்களில் வெளிவந்த, மாவீரர்களின் வரலாறுகளைத் தாங்கிய நினைவுக் கட்டுரைகளின், முழுமையான தொகுப்பு நூல்.




**எல்லா இடங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்**

(சி-5542)


## அழைப்பு

யாழ்ப்பாணம்-இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

**வழங்கும்**

**முழுநிலா நாள் அறிவியல் அரங்கு**

காலம்: 09-12-92 புதன்கிழமை
நேரம்: பிற்பகல் 3-00 மணி
இடம்: குமாரசுவாமி மண்டபம்
விடயம்: பிற்பகல் 3-00 -- 3-30 மணி வரை

**"சமகால உலக சம்பவக்கொத்து"**

திரு. சமாதிலிங்கம் சத்தியசீலன்
சிரேஷ்ட விரிவுரையாளர் - வரலாற்றுத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

பிற்பகல் 3-30 — 4-30 வரை

**"கணிதமும் பொதுப்பயன்பாடும்"**

கலாநிதி சிவக்கொழுந்து ஸ்ரீ சற்குணராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர் -கணிதத்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

பங்குபற்றி பயன்பெற
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

## 31-ம் நாள் நினைவாக...

தோற்றம்: 05 — 06 — 1908



மறைவு: 08 — 11 — 1992

அமரர்

**சின்னத்தம்பி வல்லிபுரம்**

உன் நினைவுகளை
இதயக் கனவுகளில்

உன் வார்த்தைகளை
வாழ்க்கையில்




**எல்லா இடங்களிலும்**
**பெற்றுக் கொள்ளலாம்**

(சி-5542)

## விற்பனை முகவர் தேவை

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய இடங்களிற்கு புத்தகம் கொண்டு சென்று விற்பதற்கு ஆட்கள் தேவைப்படுகின்றது.

கொமிஷன் வழங்கப்படும்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**தமிழ்த்தாய் புத்தகசாலை**
191, மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலைய அருகாமை)
யாழ்ப்பாணம்.

(3226)

குறைந்த விலை! நிறைந்த சேவை!

**நத்தார் வாழ்த்துக்கள்**
**புதுவருட வாழ்த்துக்கள்**
**மெய்கண்டான் நாட்காட்டிகள்**
**டயறிகள்**

இவற்றினை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்கட்கு
கழிவு வழங்கப்படும்.

மற்றும்

பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை சகலவிதமான புத்தகங்களையும்கொள்வனவுசெய்ய

நாடவேண்டிய ஒரே இடம்

**தமிழ்த்தாய் புத்தகசாலை**
191, மின்சாரநிலைய வீதி,
(பஸ்நிலைய அருகாமை)
யாழ்ப்பாணம்.

(3227)

திரு. சமாதிலிங்கம் சத்தியசீலன்
சிரேஷ்ட விரிவுரையாளர் - வரலாற்றுத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

பிற்பகல் 3-30 — 4-30 வரை

**"கணிதமும் பொதுப்பயன்பாடும்"**

கலாநிதி சிவக்கொழுந்து ஸ்ரீ சற்குணராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர் - கணிதத்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

பங்குபற்றி பயன்பெற
**அனைவரையும் அன்புடன்**
**அழைக்கின்றோம்.**

பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலாளர்
(சி-5550)

புலிகளின் குரல்

## வெற்றிடங்கள்

புலிகளின் குரல் வானொலி நிலையத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பிரதம செய்தித் தொகுப்பாளர்**
- ★ தினசரிப் பத்திரிகை ஒன்றில் ஆசிரியராக கடமையாற்றிய அனுபவம் அல்லது இதற்குச் சமனான அனுபவம்.
- ★ செய்தி தொகுப்பதில் நீண்டகால அனுபவம்

**2. நிகழ்ச்சி அமைப்பாளர்**
- ★ கலை, இலக்கியத் துறையில் நீண்டகால ஈடுபாடு.
- ★ இசைத் துறையில் நீண்டகால ஈடுபாடு.

**3. மொழி பெயர்ப்பாளர்**
- ★ ஆங்கில நூல்கள், பத்திரிகைகளை தமிழாக்கம் செய்யும் திறமை
- ★ சிங்கள மொழி அறிவு மேலதிக தகுதியாக கருதப்படும்.

**4. வாத்தியக் கலைஞர்கள்**
- ★ வானொலி நிகழ்ச்சிகளிலும், இசைப்பாடல்களிலும் வாத்தியங்கள் வாசிப்பதற்குரிய திறமை.
- ★ நீண்டகால அனுபவம்.

ஆரம்ப வேதனம்:
ரூபா 2,500/- இலிருந்து 4,500/- வரை
அனுபவம் தகுதிக்கேற்ப வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் தங்களது சுய விபரத்துடனான விண்ணப்பங்களை 1992-12-15-ம் திகதியன்றோ அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

(சி-5551)

பொறுப்பாளர்
புலிகளின் குரல்
திருநெல்வேலி

...தபுர தில் குண்டு வெடித்து இருவர் இறந்தனர். இது வரை இக் கலகங்களில் தென் மாநிலங்களில் இறந்தவரின் எண்ணிக்கை 28 எனத் தெரிய வருகிறது.

### பிரதமர்

முஸ்லிம் தலைவர்கள் முன் வைக்கும் கோரிக்கைகளை ஆதரிக்கவும் ஜனதா தளம் தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் முடிவு செய்துள்ளன.

இதேவேளை பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் நேற்றுக் குழப்பம் நிலவியது.

லோக் சபையில் மையப் பகுதிக்கு முன்னேறிய காங்கிஸ் மற்றும் எதிர்க் கட்சி உறுப்பினர் கோஷங்கள் எழுப்பினர். இதனால் நேற்று இரு சபைகளிலும் அலுவல்கள் எதுவும் இடம் பெறவில்லை.

இதேவேளை மத அடிப்படைவாதக் கட்சிகளுக்குத் தடை விதிக்க இந்திய மத்திய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

விஸ்வ ஹிந்து பரிஷித், சிவசேனை ஆகிய அமைப்புகள் தடை செய்யப்படலாம் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### ஐ நா

நடாத்தவுள்ளது தெரிந்ததே

இன்று காலை 10.00 மணிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகளை இந்த உயர் அதிகாரிகள் சந்திக்கவுள்ளனர். அவ்வேளையில் யாழ்ப்பாணத்தில் உள்ள சில அகதி முகாம்களை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் பொறுப்பேற்று நடத்த வேண்டும் என கோரவுள்ளதாக தெரியவருகிறது.

### குடிநீர்


கொலைக்கும், ரெலோவைச் சேர்ந்த கருணாகரன், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் போன்றோர் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சிகளுக்கும் காரணகர்த்தா என்றும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

### படம்பிடித்

என்று தீவிரமாக ஆராயப்பட்டுவருகின்றது.

சம்பவம் நடைபெற்றவுடன் ஸ்தலத்தில் இருந்து எடுக்கப்பட்ட மேற்படி புகைப்படங்களை யார் எடுத்தது என்றும் இவற்றை எதிர்க்கட்சிகள் எவ்வாறு பெற்றுக் கொண்டன என்பது குறித்தும் இராணுவ வட்டாரங்கள் ஆராய்ந்து வருகின்றன. இவ் விடயத்தை ஆராய்வதற்காக இராணுவ உளவறியும் படைப்பிரிவு உள்ளக விசாரணை ஒன்றை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

தோற்றம்: 05 — 06 — 1908



மறைவு: 08 — 11 — 1992

அமரர்
## சின்னத்தம்பி வல்லிபுரம்

உன் நினைவுகளை
இதயக் கனவுகளில்
சேர்க்கின்றோம்.

உன் வார்த்தைகளை
வாழ்க்கையில்
கோர்க்கின்றோம்.

உன் வாழ்வினை
இமைசளுள்
சுமக்கின்றோம்.

59, குமாரசாமி வீதி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி-5549)

## மரண அறிவித்தல்
### அருட்திரு. Z. N. குருஸ் அ. ம. தி.

அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட் திரு. Z. N குருஸ் அடிகளார் 07-12-92 திங்கட்கிழமை இறைபதம் சேர்ந்தார். இவரது பூதவுடல் கொழும்புத்துறை அமலஉற்பவ இல்லத்திலிருந்து 8 ஆம்திகதி (இன்று) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அங்கிருந்து 09-12-92 புதன்கிழமை காலை 7 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்திற்கு கொண்டு செல்லப்பட்டு காலை 9 மணிக்கு இடம்பெறும் இரங்கற் திருப்பலியின் பின்பு நல்லடக்கம் செய்யப்படும்.

அருட்திரு. பி. பி. பிலிப் அ. ம. தி.
மாகாணத் தலைவர்
அமல மரித் தியாகிகள் சபை

[3770]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**07.12.92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6995

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

28-6623, 26-0355, 24-9609, 26-3969, 28 0732 26-1741 41-9355, 28-1542, 42-9345, 40-2573, 40-2394, 26-6645 25-0048 28-4550, 41-9579, 28-4672, 24-8631, 28-7999 26-3633, 26-4434, 26-7663

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-7777, 41-1995, 29-9928, 22-7897, 27-6704, 41-9989, 26-7525, 27-6887, 26-1343, 26-2291, 26-3873, 42-9975, 41-8292, 26-0736, 28-4255, 26-5244, 26-6461, 26-3068, 27-4623, 24-7078, 41-5599, 26-2627

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.